அக்டோபர்: 27

## 2. சந்தோஷமாகிய கனி

வாசிக்க: ரோமர் 8:36-39

நிறைவானாலும், குறைவானாலும், வாழ்வானாலும், தாழ்வானாலும், நாம் விரும்புகிற காரியங்கள் நடந்தாலும், நடக்காமல் போனாலும் கர்த்தருக்குள் மனமகிழ்ச்சியாக இருப்பதே சந்தோஷமாகும். பிலிப்பியர் 4:4,11. கர்த்தருக்குள் சந்தோஷமாக இருப்பதே நமது பெலனாக இருக்கிறது.

ஒரு மரமானது தனது உற்பத்தியாகிய கனியை பிறரின் தேவையை பூர்த்தி செய்ய கொடுக்கிறது. அத்தோடு தனது இன விருத்திக்கும் பயன்படுகிறது. இது போலவே தேவ பிள்ளையும் அல்லது விசுவாசியும் பிறருடைய தேவையை பூர்த்தி செய்வதோடு தேவராஜ்ஜியம் விரிவடைய செய்ய கனி கொடுக்க வேண்டும். மற்றவர்களை சந்தோஷமாய் வைத்திருக்க வேண்டும். கிறிஸ்து நம்மீது கரிசனை செலுத்துவது போல நாமும் பிறர் மீது கரிசனை செலுத்துவோம்.

ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்து நமக்கு தகப்பனாய் இருக்கிறார். அவருக்கு பிள்ளைகளாய் நாமிருக்கிறோம். ஒரு சிறு பிள்ளை என்ன நெருக்கடி வந்தாலும் கவலையில்லாமல் சகவாசமாய் நித்திரை செய்யும். அப்பா இருக்கிறார் தானே என்ற நம்பிக்கையில் அவ்வாறு செய்யும். நாமும் தான் பாடுகள் துன்பங்கள் நெருக்கங்கள் வரும் போது. இயேசப்பாவின் மீது நம்பிக்கை வைத்து ஜெபித்து மகிழ்ச்சியோடு வாழவேண்டும்.

பொதுவாக எல்லோரும் தான் தான் சந்தோஷமாயிருக்க ஆவலாயிருப்பார்கள். அதில் தவறில்லை. ஆனால் சிலர் இன்னொருவரை வருத்தி அதன் மூலம் சந்தோஷமாயிருப்பார்கள். இது தவறானாது. நாமும் சந்தோஷமாயிந்து மற்றவர்களையும் சந்தோஷமாய் வைத்திருக்க வேண்டும். சபிக்கப்பட்ட பூமியில், உலகத்தின் அதிபதியாகிய சாத்தானையும் எதிர்த்து இப் பூமியில் வாழவேண்டியுள்ளது. பாடுகள் நிச்சயம் உண்டு. ஆனாலும் இயேசுக்கிறிஸ்துவை தகப்பனாய் கொண்ட நமக்கு அவர் பாதுகாவலராய் இருக்கிறார்.
என்னை என் குடும்பத்தை இயேசப்பா ஆளுகை செய்கிறார். நான் கலங்காமல் பயப்படாமல் எல்லா சூழ்நிலையிலும் கிறிஸ்த்துவோடு மகிழ்ச்சியாக வாழுவேன்.

### கேள்வி:

1. எது நமது பெலனாயிருக்கிறது?
2. யார் மீது கரிசனை செலுத்த வேண்டும்?
3. எல்லா சூழ்நிலையிலும் என்னால் சந்தோஷமாயிருக்க முடியுமா?